1968, மார்ச் 5]

திரு வ. ஜார்ஜ் : நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தில் கடல் பகுதிகளில் தடுப்புச் சுவர் போட முன்னைய அரசு 20 லட்சம் ரூபாய் திட்டத்தைப் போட்டிருப்பதாகச் சொன்னார்கள். ஆனால் இந்த அரசு கடற்கரையோரப் பகுதிகள் எல்லாவற்றிலும் கடல் அரிப்பு பாதுகாப்புச் சுவர் (போடுவதாக தங்கள் தேர்தல் அறிக்கையில் குறிப்பிட்டும் இப்போது) எந்த அளவுக்கு அதிகமாகச் செய்ய முன் வந்திருக்கிறார்கள் அல்லது அதிலிருந்து பின்வாங்கி விட்டார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : நீள கடற்கரை முழுவதும் சுவர் போடப்போவதாகச் சொல்லவில்லை. பயங்கர அரிப்பு, புயல் ஏற்படுகிற பகுதிகளில் மட்டும் சுவர் போடுகிற திட்டம் அறிவிக்கப்பட்டிருக்கிறது. அதில் இருந்து இந்த அரசு பின்வாங்கவில்லை. அதற்கான ஏற்பாடுகளை இந்த அரசு செய்யும்.

கோட்டாட்சித் தலைவர் அலுவலகம், உசிலம்பட்டி.

*144 வினா.—**திரு என். எஸ். வி. சித்தன் :** மாண்புமிகு உணவு-வருவாய்த் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா :

மதுரை மாவட்டம் உசிலம்பட்டியிலுள்ள கோட்டாட்சித் தலைவர் (R.D.O.) அலுவலகத்தை திருமங்கலத்துக்கு மாற்றும் நடவடிக்கை எந்த நிலையில் உள்ளது ?

மாண்புமிகு திரு கே. ஏ. மதியழகன் : இது போன்ற செயற்குறிப்பு தற்சமயம் இல்லை.

திரு என். எஸ். வி. சித்தன் : பேரவைத் தலைவர் அவர்களே, மதுரை மாவட்டம் கோட்டாட்சித் தலைவர் அலுவலகம் உசிலம்பட்டியில் இருப்பதால் மக்கள் போய் வருவது கஷ்டமாக உள்ளது. ஆகவே அதை டெல்லி-கன்னியாகுமரி பாதையில் உள்ள அந்தக் கோட்டத்திலேயுள்ள மிகப்பெரிய ஊரான திருமங்கலத்திற்கு மாற்ற உத்தேசம் உண்டா ?

மாண்புமிகு திரு கே. ஏ. மதியழகன் : தற்போது அப்படிப்பட்ட செயற்குறிப்பு எதுவும் இல்லை என்று சொன்னேன்.

DR. H. V. HANDE : Sir, Usilampatti belongs to my leader, Thiru Mookiah Thevar's constituency. May I know whether there was at any time any proposal to transfer the Revenue Divisional Office from Usilampatti to Tirumangalam and if so, the reasons therefor ?

THE HON. THIRU K. A. MATHIALAGAN : There have been representations, but there is no proposal at present.

கொத்துக்கடலை.

*145 வினா.—**திரு எஸ். ஜே. ராமசாமி :** மாண்புமிகு உணவு வருவாய்த்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) 1967-ம் ஆண்டில் வெளி மாநிலங்களிலிருந்து நமது மாநிலத்திற்கு முழு கடலை இறக்குமதி செய்ய எத்தனை வியாபாரிகளுக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது ?

(இ) ஒவ்வொரு மாவட்டத்திற்கும் எவ்வளவு டன்கள் அனுமதிக்கப் பட்டுள்ளது ?

(உ) இதில் கூட்டுறவு சங்கங்களுக்கு அனுமதிக்கப்பட்ட டன்கள் எத்தனை ?

மாண்புமிகு திரு கே. ஏ. மதியழகன் : (அ) இல்லை.

(இ) & (உ) இவ்வினுக்கள் எழவில்லை.

திரு எஸ். ஜே. ராமசாமி : இந்த முழுக் கடலையை வெளியிடங்களுக்குப் போய் வாங்குகிருர்களே, எத்தனை டன் வாங்குகிருர்கள், எந்த விலைக்கு வாங்குகிருர்கள் ?

மாண்புமிகு திரு கே. ஏ. மதியழகன் : பொதுவாகக் கேள்வி போடு கிருர்கள். தனியாகக் கேட்கவேண்டும்.

திரு வி. கே. கோதண்டராமன் : முழுக் கடலையும் உணவுப் பொருளைச் சேர்ந்தது தான் என்ருலும் அரிசியைப் போல அதற்குக் கட்டுப்பாடு இருக்க வேண்டியதில்லை. ஆகவே நம்முடைய வியாபாரிகள் மற்ற மாநிலங்களுக்குச் சென்று கொள்முதல் செய்து நம்முடைய மக்களுக்குக் குறைந்த விலையில் விற்பனை செய்வதற்கு கட்டுப்பாடு உண்டா ? இருந்தால் அதைத் தளர்த்துவதற்கு இந்த அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு கே. ஏ. மதியழகன் : முழுக் கடலை சம்பந்தமாக பெங்கால்கிராம் என்பது நமக்கு 1 லட்சம், 50 ஆயிரம் டன் தேவைப் படுகிறது. மேலும் பெங்கால்கிராம் டால்—உடைத்த பருப்பு 1 லட்சம் டன் தேவைப்படுகிறது. இவை நம்முடைய இராஜ்யத்தில் இல்லாததால் வெளி மாநிலங்களில் இருந்தே இறக்குமதி செய்ய வேண்டியிருக்கிறது. குறிப்பாக பஞ்சாப், ஹரியாணு, உத்திரப்பிரதேசம்—இங்கிருந்துதான் இறக்குமதி செய்யப்படுகிறது. முதலில் தனி வியாபாரிகள் மூலம் கொள்முதல் செய்தார்கள். அதன் பிறகு மத்திய அரசு அரசாங்கக் கணக்கில் வியாபாரம் செய்ய வேண்டுமென்று சொன்னுர்கள். அதோடு அந்த அந்த மாநிலக் காரர்கள் அவற்றை வெளியிடங்களுக்கு அனுப்புவதைத் தடை செய்து விட்டார்கள். அதன் காரணமாக அந்த அந்த மாநில அரசாங்கங்களிடம் கேட்டுக் கொண்டதற்கு நமக்கு ஒரு விசித்திரமான நிலையில் 50,947 டன் தான் ஒதுக்கினுர்கள். அதிலே கூட ஆயிரம் டன் கிடைக்கவில்லை. 3 ஆயிரம் டன் ஹரியாணு நமக்குக் கொடுப்பதாகச் சொல்கிருர்கள். ஆனுல் அதற்கும் மத்திய அரசாங்க ஒப்புதல் நமக்கு வரவில்லை. ஆகவேதான் இப்போது இப்படி ஒரு மாநிலத்தில் இருந்து இன்னொரு மாநிலத்திற்குப் போவதற்கான தடையை அறவே நீக்க வேண்டுமென்று நாம் அழுத்தம் திருத்தமாக வற்புறுத்தி வருகிருேம். தடைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. தடைகள் எடுக்கப்பட்டு அவர்களும் நமக்குக் கொடுக்க சம்மதித்தால் தான் நாம் கொண்டுவருகிற நிலை ஏற்படுகிறது.

திரு ஏ. எம். ராஜா : தலைவர் அவர்களே, நாம் இப்படி வெளி மாநிலங்களை நம்பியிருப்பதை மாற்ற தமிழகத்திலேயே இதை உற்பத்தி செய்ய போதிய முயற்சி எடுத்துக்கொள்ளப்படுமா ?

மாண்புமிகு திரு கே. ஏ. மதியழகன் : அதற்கான முயற்சிகள் புட் கமிஷனர் திரு ராயப்பா அவர்கள் தலைமையில் ஆய்வு செய்யப்பட்டு இப்போது வடாற்காடு மாவட்டம் போன்ற இடங்களில் மேற்கொள்ளப் பட்டிருக்கிறது.

Dr. H. V. HANDE : Sir, if I understand the Hon. Minister correctly, out of 2½ lakh tonnes, we have got only a few thousands of tonnes. May I know from the Hon. Minister whether the total quantity is collected by the Government and whether the transaction is done on a Government-to-Government level ? Also, what is the rate at which this Government are likely to get Bengalgram from other States and what is the rate at which they are likely to sell it to consumers ?

The Hon. Thiru K. A. MATHIALAGAN: That varies according to market rates, availability and our procuring capacity and that cannot be specifically stated on the floor of this House. But the basic fact here is that we did not get anything worth mentioning at all this year.

ஹாஜி ம. மு. பீர் முஹம்மது: வெளி மாநிலங்களில் இருந்து முழுக் கடலையைச் சர்க்கார் வாங்குகிறபோது—நம் மாநிலத்தில் உள்ள பொரிக் கடலைக்காரர்களுக்கு—அவர்கள் அந்தச் சிறு தொழிலில் ஊன்றிக் கொள்ள கட்டுப்பாட்டு விலையில் கொடுப்பதற்கு இந்த அரசு ஏற்பாடு செய்யுமா ?

மாண்புமிகு திரு கே. ஏ. மதியழகன்: இப்போதுள்ள நிலைமையில் இருக்கிறதை வைத்துக்கொண்டுதான் கொடுக்க வேண்டியிருக்கிறது. தமிழில் ஒரு பழமொழி சொல்வார்களே—சட்டியில் இருந்தால் தான் அகப்பையில் வரும் என்று. அதுதான் இப்போதுள்ள நிலைமை.

திரு ஆலடி அருணா: தலைவர் அவர்களே, வெளி மாநிலங்களிலே பெங்கால்கிராம் வாங்குவதற்குத் தனிப்பட்ட வியாபாரிகளுக்கு அனுமதியளிக்கவில்லை என்று அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். தனிப்பட்ட வியாபாரிகளை அனுமதிப்பதிலே என்ன தவறு இருக்கிறது ? அவர்களை அனுமதித்தால் அவர்கள் வெளிமாநிலங்களிலிருந்து அதிகமான பெங்கால்கிராமை இந்த மாநிலத்திற்குக் கொண்டு வந்து விற்பதற்கு வழியேற்படுகிற வகையில் சர்க்கார் முயற்சி செய்யுமா ?

மாண்புமிகு திரு கே. ஏ. மதியழகன்: தவறு இங்கே இல்லை. எந்த எந்த மாநிலங்களிலே கடலைப் பயிர் விளைகின்றதோ அந்த மாநிலங்கள் எல்லாம் அதைக் கொண்டு வருவதற்குத் தடை போட்டு இருக்கிறார்கள். தடையுத்தரவை எடுத்து விடுங்கள் என்று அவர்களிடம் சொல்வதற்கு மத்திய அரசுக்குத் தைரியமும் இல்லை. கேரளா போன்ற மாநிலங்களுக்கு அரிசி கொடுக்க வேண்டுமென்று வலியுறுத்துகின்ற அரசு அவர்களிடமிருந்து கொடுக்கச் சொல்வதற்கு வழியில்லை. இங்கேயிருக்கிற வியாபாரிகள் அங்கே போய் வாங்கக்கூடாது என்று இந்த அரசாங்கம் எந்தத் தடையும் செய்யவில்லை.

திரு ரா. ராமச்சந்திர துரை: கடலை இறக்குமதிக்கு பெர்மிட் பழைய பெர்மிட் ஹோல்டர்களுக்குத்தான் கொடுக்கப்படுகிறதா ? அல்லது புதிதாக வேண்டுகிறவர்களுக்கும் பெர்மிட் கொடுக்கப்படுகிறதா, இல்லையெனில், இனிமேலாவது கொடுக்கும் திட்டம் உண்டா ?

மாண்புமிகு திரு கே. ஏ. மதியழகன்: இது வேறு கேள்விக்குத் தயாரிக்கப்பட்ட விடை. அது இந்தக் கேள்வியோடு பொருந்தவில்லை.

திரு வி. டி. அண்ணாமலை: கடலை, ஏழை எளியவர்களின் அன்றாட உணவுப் பண்டம். தமிழகத்திலே இட்டிலிக்குச் சட்டினிக்கு மிகவும் அத்தியாவசியமான பண்டம் இது. அதோடு மட்டுமல்ல, மற்ற உணவுப் பண்டங்களுக்கும், பதார்த்தங்களுக்கும் இது அத்தியாவசியமான பண்டமாக இருக்கிறது. அரிசி வேண்டுமென்று கேரள அமைச்சர் அவர்கள் தமிழகத்திற்கு வந்தது மாதிரி நம்முடைய மாநில அமைச்சர் அவர்களும் எந்த இடத்திலே கடலை விளைகிறதோ அந்த மாநிலத்திற்குச் சென்று இதைப்பற்றிப் பேச வேண்டும். அவர்களிடம் $1\frac{1}{2}$ லட்சம் டன் கேட்டதற்கு 1 லட்சம் டன் தான் கொடுக்கப்பட்டு இருக்கிறது. இப்பொழுது விலை உச்சத்திற்குப் போய்விட்டதாலே ஏழைகள் உப்புப்போட்ட கடலையைக்கூட வாங்கிச் சாப்பிட முடியாத நிலைமை இருக்கிறது. ஆகவே சர்க்காரே அதைக் கொள்முதல் செய்வார்களா ?

மாண்புமிகு திரு கே. ஏ. மதியழகன்: இது சம்பந்தமாக முதலமைச்சர்கள் மாநாட்டில் இரண்டு முறைகள் தமிழகத்தின் உணவு அமைச்சர் அழுத்தந்திருத்தமாக வற்புறுத்தியிருக்கிறார்கள். இது எல்லாப் பத்திரி

கைகளாலும் வரவேற்கப்பட்டது. இது சம்பந்தமாக உணவுத்துறையைச் சேர்ந்த உயர்தர அதிகாரி ஹரியாணு, உத்திரப்பிரதேசம், மத்தியப்பிரதேசம் போன்ற மாநிலங்களுக்குக் கடந்த இரண்டு மாதங்களுக்கு முன் சென்று அங்குள்ள நிலவரங்களை அறிந்து வந்திருக்கிறார்கள். உத்திரப் பிரதேச மாநிலம்கூட ஓரளவுக்கு நமக்குக் கடலையைக் கொடுப்பதற்கு முன்வந்திருக்கிறது. நமது வேண்டுகோளின்படி தடையை நீக்கியிருக்கிறார்கள். ஆனல் மத்திய அரசு சில தடைகளைப் போடுவதால் இன்னும் முழுமையாகச் செய்ய முடியவில்லை.

திரு எம். சுரேந்திரன் : கேரளாவிலே உணவுப் பற்றுக்குறை இருப்பதால் அங்கே நோ அப்ஜக்ஷன் சர்டிபிகேட் கொடுக்கப்பட்டு வெளி ராஜ்யங்களிலிருந்து அரிசி கொண்டு வந்து வியாபாரம் செய்து கொண்டிருக்கிறார்கள். இப்பொழுது கடலை வெளியிலிருந்து இங்கு வருவதற்கு இல்லை என்ற நிலைமை இருக்கிறது. ஆகவே, இந்த ராஜ்யத்திலும் நோ அப்ஜக்ஷன் சர்டிபிகேட் கொடுத்து கடலையை வியாபாரம் செய்வதற்கு இந்த சர்க்காருக்கு உத்தேசம் உண்டா ?

மாண்புமிகு திரு கே. ஏ. மதியழகன் : அது இந்த சர்க்காருடைய உத்தேசம்தான். ஆனல் அதைச் செய்வதற்கு இரண்டு காரியங்கள் செய்யப்படவேண்டும். ஒன்று கடலை எந்த மாநிலங்களிலே விளைகிறதோ அந்த மாநிலங்கள் கடலையைக் கொடுப்பதற்கு முன்வர வேண்டும். மத்திய அரசும் இதற்கு உபத்திரவம் கொடுக்காமல் அனுமதி வழங்குவதற்கு முன்வர வேண்டும். இரண்டும் செய்தால்தான் நோ அப்ஜக்ஷன் சர்டிபிகேட் உயிர் பெறுகிறது.

திரு. எம். எஸ். மணி : ஒவ்வொரு மாவட்டத்திற்கும் ஒதுக்கப்பட்ட பெங்கால்கிராமில் வியாபாரிகளுக்கு எந்த விகிதாசார அடிப்படையில் கொடுக்க உத்திரவு செய்யப்பட்டிருக்கிறது என்று அறியலாமா ?

மாண்புமிகு திரு கே. ஏ. மதியழகன் : விகிதாசாரம் கொடுப்பதற்கு அவ்வளவு பெரிய அளவில் ஒதுக்கப்படவில்லை. சிறிய விகிதாசாரப்படி அவற்றை விநியோகிப்பதற்கு, நிர்வாக உத்தேசப்படி செய்வதற்கு அதிகாரங்கள் அந்தந்தக் கலெக்டர்களுக்கு வழங்கப்பட்டிருக்கிறது.

திரு இல. பலராமன் : அமைச்சர் அவர்கள் பதில் சொல்லும்பொழுது வட ஆர்க்காடு மாவட்டத்தில் கொத்துகடலை உற்பத்தி செய்வதற்கான வாய்ப்புக்களை உணவுக் கமிஷனர் பரிசோதிப்பதாக அறிவித்தார்கள். அது போன்று வட ஆர்க்காடு மாவட்டத்தில் எந்தஎந்தத் தாலூகாக்களில் அதிகமாக விளையும் என்று புள்ளி விவரம் இருக்கிறதா ? வட ஆர்க்காடு முழுவதிலும் விளையக்கூடிய சாத்தியம் இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு கே. ஏ. மதியழகன் : இது வேளாண்மைத் துறையைப் பற்றியது. தனிக் கேள்வி வேண்டும்.

திரு கே. என். குமாரசாமி : கடலைப் பற்றுக்குறையினல் நாம் கடலைக்காக வெளி மாநிலங்களை எதிர்பார்ப்பதைக் காட்டிலும் நம்முடைய நாட்டிலேயே உள்ள கருமண்ணில் கடலை நன்றாக விளையும் கோவைப் பகுதியிலே, பனி காலத்திலே கருமண்ணில் கடலை பயிர் செய்ய முடியும். அப்படிச் செய்வதற்கு அரசாங்கம் ஊக்கம் கொடுப்பதற்கு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு கே. ஏ. மதியழகன் : அதுதான் செய்யப்படுகிறது. இதிலே தன்னிறைவு பெறும் திட்டம் திரு ராயப்பா அவர்களின் திட்டம் வேகமாக தொடங்கப்பட்டிருக்கிறது. ஆனல், திட்டம் நிறைவேற்றப்பட்டு பயிர் விளைவதற்கு முன்னல் இப்படிப்பட்ட காரியங்களையும் நாம் செய்ய வேண்டியிருக்கிறது.

திரு ஆர். நாகசுந்தரம் : தலைவர் அவர்களே, சென்ற ஆட்சி கடலை வியாபாரம் செய்ததே, அதில் லாபமா, நட்டமா ?

(விடை இல்லை)

1968, மார்ச் 5]

திரு. ஏ. கோ. பாலகிருஷ்ணன் : இந்தக் கடலையின் தேவையினுல் அது பல வியாபாரிகளுக்கும் சரி, ஹோட்டல் முதலாளிகளுக்கும் சரி கஷ்டத்தைக் கொடுத்துக் கொண்டே இருக்கிறதே, கோயில்களிலே சுண்டல் அதிகமாகக் கொடுப்பார்கள். இப்பொழுது அது தேவைப்படுகிறதா, இல்லையா என்பதைக் கேட்டிருக்கிருர்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : எனக்குக் கோயில்களிலே அதிகப் பரிச்சயம் இல்லை.

திரு. எஸ். ஜே. ராமசாமி : தலைவர் அவர்களே, மற்ற உணவுப் பண்டங்களின் விலை, மிளகாய், புளி இவற்றின் விலையெல்லாம் இறங்கி யிருக்கிறது. அதில் சந்தேகம் இல்லை. ஆனுல் கடலையின் விலை மாத்திரம் இறங்கவில்லை. வடக்கேயிருந்து அது வர வேண்டியிருக்கிறது. அதைக் கொண்டுவருவதற்குத் தாராளமாகப் பெர்மிட் சலுகைகளை வியாபாரிகளுக்குக் கொடுத்து சர்க்கார் இங்கு வரவழைக்குமா ? அரிசியைக் கொடுத்து விட்டு இங்கே கடலையை வாங்குவதற்கு வழியிருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு கே. ஏ. மதியழகன் : திருப்பித் திருப்பிச் சொன்னேன். இந்த அரசாங்கம் எல்லா முயற்சிகளையும் எடுத்துக் கொண்டிருக்கிறது. இந்த மன்றமும் ஆதரவு அளித்தால் இந்தக் காரியம் மிக சரளமான நிலைமைக்கு வரும் என்று எல்லோரும் எதிர்பார்க்கலாம்.

திரு ரா. கிருஷ்ணசாமி கவுண்டர் : இந்தப் பயிர் வகைகள் விளைகின்ற வடக்கே உள்ள மாநிலங்களிலே 75 ரூபாய்க்கு வாங்கி 150 ரூபாய்க்கு விற்கின்ற காரணத்தினுலே அங்கேயுள்ளவர்கள் உற்பத்தியைக் குறைத்துக்கொண்டார்கள் என்றுகூட பேச்சு அடிபடுகிறதே, அது உண்மைதானு என்று சொல்லமுடியுமா ? அப்படி 75 ரூபாய்க்கு வாங்கி 150 ரூபாய்க்கு விற்கின்ற நிலைமையினுல்தான் இப்படிப்பட்ட கஷ்டம் ஏற்படுகிறது. எனவே தனியார் வியாபாரிகளை அனுமதித்தால் இந்தக் கஷ்டம் இருக்காது என்பதால் அப்படிச் செய்வதற்கு அரசாங்கம் ஏற்பாடு செய்யுமா ?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : 75 ரூபாய்க்கு வாங்கி 150 ரூபாய்க்கு விற்பதாகச் சொல்லுகிருர்கள். அது தோராயமானது. பொதுப் படையாகச் சொல்வதற்கு நான் பதிலளிக்க முடியாது. அவர்கள் கூறுவது சரியான பொருள் நிறைந்த காரியம் அல்ல. இப்பொழுது இருக்கிற சர்க்காரினுடைய கொள்கை, அரசாங்கமே முழுப்பொறுப்பு ஏற்றுக்கொள்ள வேண்டுமென்ற கருத்து அல்ல.

(திரு. ரா. கிருஷ்ணசாமி கவுண்டர் எழுந்தார் . . . .)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நான் உங்களை அழைக்கவில்லையே, அழைத்தால்தான் பேசவேண்டும்.

திரு. கொ. இர. ஞானசம்பந்தன் : ஒவ்வொரு மாவட்டத்திற்கும் மாவட்டவாரியாக எவ்வளவு கடலை விநியோகிக்கப்பட்டிருக்கிறது என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : இதற்கு ஏற்கனவே நான் பதில் அளித்துவிட்டேன்.

காட்டுவளத்துறையினர் பயிற்சிப் பள்ளிகள்.

*146 வினு.—திரு. பெ. மலைச்சாமி: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினுவிற்கு விடையளிப்பாரா :—

தமிழகத்தில் காட்டுவளத்துறைப் பணியாளர் பயிற்சி நிலையங்கள், காட்டுவள ஆராய்ச்சி நிலையங்கள் முறையே எங்கெங்கு உள்ளன ?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : தமிழ்நாட்டில் காடுகள் துறைப் பணியாளர் பயிற்சிப் பள்ளிகள் இரண்டு உள்ளன: (1) வைகை அணையில் உள்ள தமிழ்நாடு காடுகள் துறைப் பயிற்சிப் பள்ளி, (2) கோவையில்